செய்தி குறிப்பு எண்.145 நாள். 12.10.2007

## தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விடுக்கும் ரம்ஜான் வாழ்த்துச் செய்தி

முஸ்லீம் சமுதாய மக்களால் ரம்ஜான் திருநாள் எழுச்சியோடும் மிகுந்த மகிழ்ச்சியோடும் கொண்டாடப்படுகிறது.

தமிழகத்தில் வாழும் முஸ்லீம் சமுதாய மக்களின் நலன்களைப் பாதுகாப்பதில் தி.மு.கழக அரசு எப்பொழுதும் கனிவும், கரிசனமும் கொண்டுள்ளது என்பது அச்சமுதாய மக்கள் அனைவரும் அறிந்ததாகும்.

தமிழக முஸ்லீம்கள் நீண்ட காலமாக எழுப்பி வந்த கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் அவர்களுக்கு அரசு வேலைவாய்ப்புகளிலும், கல்வி நிறுவனங்களிலும் 3.5 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கி பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த பொன்னாளாகிய 15.9.2007 அன்று அவசரச் சட்டம் ஒன்றைப் பிறப்பித்து வரலாறு படைத்துள்ள வேளையில் கொண்டாடப்படும் இந்த ரம்ஜான் திருநாள் இஸ்லாமிய சமுதாய மக்களுக்குக் கூடுதல் மகிழ்ச்சியை அளித்திடும் என நம்புகிறேன்.

அண்ணல் நபிகள் பெருமான் “மார்க்கம் என்பது பிறர் நலம் பேணுவது” என மொழிந்த வழியில் இஸ்லாமிய சமுதாய மக்கள் ஒரு மாத காலம் கடுமையான நோன்பினை மேற்கொண்டு, பசியின் தன்மையை உணர்ந்து, பிறர் நலனில் அக்கறையையும், இல்லாதோருக்குக் கொடுத்து உதவும் ஈகைக் குணத்தையும் பெறுகின்றனர். மனித சமுதாயத்திடம் இத்தகைய உயர்ந்த சிந்தனையை வளர்க்கின்ற ரம்ஜான் நோன்பினை வெற்றிகரமாக நிறைவேற்றி இத்திருநாளைக் கொண்டாடும் இஸ்லாமிய சமுதாய மக்கள் அனைவர் வாழ்விலும் கல்வி, செல்வம், இன்பம் முதலிய அனைத்தும் செழித்திட என் இதயம் கனிந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

****

வெளியீடு: இயக்குநர் செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.